செய்தி வெளியீடு எண் :25 நாள்:16.05.2018

***தேனி மாவட்டம்***
***வீரபாண்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உள்ள பாடப்பிரிவுகளான மாணவ, மாணவியர்களுக்கான சேர்க்கை நடைபெறவுள்ளது***
***மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-***

******

தேனி மாவட்டம், வீரபாண்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் உள்ள பாடப்பிரிவுகளான பி.காம்., பி.ஏ (ஆங்கிலம்), பி.ஏ (பொருளாதாரம்), பி.எஸ்.சி (கம்ப்யூட்டர் சயின்ஸ்) மற்றும் பிசிஏ ஆகிய ஐந்து பாடப்பிரிவுகளுக்கும் 2018-19-ஆம் ஆண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பம் வீரபாண்டி கிழக்கு பகுதியில் வயல்பட்டி ரோட்டில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் இயங்கிவரும் இக்கல்லூரியின் தற்காலிக கட்டிடத்தில் வினியோகம் செய்யப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு இலவசமாக சேர்க்கை விண்ணப்பம் வினியோகிக்கப்படும். மற்ற வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு விண்ணப்பக்கட்டணம் ரூ.48/-ம், பதிவுக்கட்டணம் ரூ.02/-ம் என மொத்தம் ரூ.50/- விண்ணப்பக்கட்டணம் வசூலிக்கப்படும். விண்ணப்பங்கள் 17.05.2018 முதல் 30.05.2018 வரை வழங்கப்படும். விண்ணப்பங்களை பூர்த்தி செய்து திரும்ப பெறும் கடைசிநாள் 30.05.2018 ஆகும். அரசு விடுமுறை நாட்கள் மற்றும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளை தவிர்த்து விண்ணப்பங்கள் காலை 10.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை வழங்கப்படும். மேலும் தகவலுக்கு 81445 67348 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். எனவே, மாணவ, மாணவியர்கள் இவ்வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**